# SG Digital

## DBS PayLah! பயன்பாட்டு வழிமுறைகள்

## உங்களுக்குத் தெரியுமா?

சிங்கப்பூரின் ஆக விருப்பமான இந்தக் கட்டணச் செயலியுடன் நீங்கள் பணம் செலுத்துவதோடு இன்னும் பலவும் செய்யலாம். சில்லறை மற்றும் சேவைக் கடைகளில் 80,000-க்கும் மேலான இடங்களில் ஏற்கப்படும் PayLah! செயலியைப் பயன்படுத்தி உணவு, பொருட்கள், வாகனப் பயணங்கள், திரைப்படங்கள் மற்றும் இன்னும் பல சலுகைகளை இன்றே கண்டறியுங்கள்.

## படிநிலை 1 — உங்கள் கைப்பேசியில் DBS PayLah! செயலியை நிறுவுங்கள்

**ஆப்பிள் ஆப் ஸ்டோர்** அல்லது **கூகல் பிளே ஸ்டோர்** சென்று, **DBS PayLah!** செயலியைப் பதிவிறக்கம் செய்து, செயற்படுத்துங்கள்.

1. ஐஓஎஸ் பயன்படுத்துவோர், '**Get**' மீது தட்டி செயலியைப் பதிவிறக்கலாம்.
2. ஆண்ட்ராய்ட் பயன்படுத்துவோர், '**Install**' மீது தட்டி செயலியைப் பதிவிறக்கலாம்.

## படிநிலை 2 — DBS PayLah! வங்கிச்சேவைக்குப் பதிவு செய்யுங்கள்




3. செயலியைச் செயற்படுத்தி, உங்களது DBS/POSB டிஜிபேங்கில் (DBS/POSB வாடிக்கையாளர்கள்) **அல்லது** MyInfo-வ் சிங்பாஸுடன் (மற்ற வங்கிகளின் பயன்பாட்டாளர்கள்) பதிவு செய்யுங்கள்.




4. DBS/POSB வாடிக்கையாளர்கள், டிஜிபேங்க் அடையாளப் பெயரையும் PIN மறை எண்ணையும் பயன்படுத்தி பதிவு செய்து தொடரலாம்.




5. மற்ற வங்கிகளின் பயன்பாட்டாளர்கள், சிங்பாஸ் அடையாளப் பெயரும் PIN மறை எண்ணும் பயன்படுத்தி அல்லது சிங்பாஸ் மொபைல் செயலியைப் பயன்படுத்தி பதிவு செய்து தொடரலாம்.

## படிநிலை 3 — DBS PayLah! செயலியுடன் QR குறியீட்டை வருடி பணம் செலுத்துங்கள்




6. வணிகரின் QR குறியீட்டை வருட, முகப்புத் திரையில் '**Scan**' மீது தட்டுங்கள்.




7. வணிகரின் QR குறியீட்டை வருடுங்கள்.




8. வணிகரின் பெயரையும் கட்டண விவரங்களையும் சரிபார்த்த பிறகு தொடருங்கள்.




9. கட்டணம் செலுத்திய பிறகு, உங்கள் பரிவர்த்தனையைப் பார்வையிட 'History' மீது தட்டுங்கள்.

## இணையப் பாதுகாப்புக் குறிப்புகள் *(நன்றி: உள்ளடக்கத்தை வழங்கியோர்)*

- உங்களது மறைச்சொல், ஒற்றைப் பயன்பாட்டு மறைச்சொல் அல்லது வேறு தனிப்பட்ட விவரங்களை யாரிடமும் அல்லது தெரியாத இணையத்தளங்களில் வெளியிடாதீர்கள்.
- உங்களது வங்கி மற்றும் தனிப்பட்ட விவரங்களை உங்களது சாதனங்களிலும் இணையத்தளங்களிலும் சேமித்து வைக்காதீர்கள். ஒரு பரிவர்த்தனையைப் பூர்த்தி செய்தவுடன் புகுபதிவிலிருந்து வெளியேறுங்கள்.
- சந்தேகத்திற்குரிய நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்காக, உங்களது வங்கிப் பரிவர்த்தனைகளுக்குக் குறுந்தகவல்/மின்னஞ்சல் தகவல் எச்சரிப்புகளுக்கு ஏற்பாடு செய்து, செயலியின் தானியக்கத் தகவல் இயக்கத்திற்கும் (in-app push notification) அனுமதி அளித்திடுங்கள்.

SG:DIGITAL

INFOCOMM MEDIA DEVELOPMENT AUTHORITY